வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    23.04.2025 புதன்கிழமை    இதழ் : 114    பக்கங்கள் : 12




# பல குற்றச்செயல்களுடன் பிள்ளையானுக்கு தொடர்பு

## விசாரணைகளில் வெளிப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 23

**கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் (சி. சந்திரகாந்தன்) பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருக்கின்றமை தெரியவந்துள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**


அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இந்த விடயங்கள் தெரிய வந்தன என்று நேற்றைய தினம் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்தார்.

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் மேலும் தெரி வித்தவை வருமாறு,

"கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கடத்தப்பட்ட விடயத்துடன் பிள்ளையான் தொடர்புபட்டுள்ளார் என்ற விடயம் மாத்திரமே பலருக்கு தெரியும். எனினும், அவருக்கு எதிராக பல்வேறு குற்றச் சாட்டுகள் காணப்படுகின்றன. அவை தொடர்பில் பல சாட்சி யங்கள் கிடைத்தவண்ணமுள்ளன. அந்த விசாரணைகள் தொடர்பில் பொலிஸாரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் எதிர்காலத்தில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவார்கள்.

பிள்ளையானை 90 நாட்கள் தடுப்புக் காவ லில் வைத்து விசாரணை

11



## பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச்சடங்கு சனியன்று

வத்திக்கான், ஏப். 23

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச்சடங்கு எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு (இலங்கை நேரம் மதியம் 1.30 மணியளவில்) நடைபெறும் என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.

காசா சாண்டா மார்ட்டாவின் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள பாப்பரசர் பிரான்சிஸின் பூதவுடல் இன்று புதன்கிழமை காலை புனித பீற்றர்ஸ் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும். பின்னர், இறுதிச் சடங்கு எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

11

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை மூடிமறைக்கின்றது அரசாங்கம்!

### சாடுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஏப். 23

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளை மூடிமறைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சாடியுள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களிடம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "கட்சி என்ற வகையில் நாம் தேர்தலுக்குத் தயாராகி வருகிறோம். ஆனால், அரசாங்கம் தமது அரசியல் வங்குரோத்து நிலையை மறைக்கும்

11

## எரிவாயு கசிந்து பரவிய தீயால் பெண் மரணம்!

கிளிநொச்சி, ஏப். 23

சமையல் எரிவாயு கசிந்து ஏற்பட்ட தீ விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி - மருதநகரை சேர்ந்த பரசுராமன்

11

## வரி குறித்து அமெரிக்காவுடன் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

அமெரிக்காவின் வரி விதிப்பு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக வாஷிங்டன் சென்றுள்ள இலங்கை பிரதிநிதிகள் குழு அங்கு கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44 சதவீத வரி அறவிடப்படவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்த வரி விதிப்பிலிருந்து நிவாரணம் பெறும் முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளதுடன் இது தொடர்பான

11

## நாமல் போன்றவர்கள் கவலைப்படுவது ஏன்?


### அரசாங்கம் கேள்வி

கொழும்பு, ஏப். 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து முன்னாள் அரசாங்க உறுப்பினர்கள் சிலர், தற்போது எதிர்க்கட்சியில் இருப்பவர்கள், ஏன் இவ்வளவு கவலைப்படுகிறார்கள் என்று அரசாங்கம் கேள்வி எழுப்புகிறது என்று நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நடந்த ஊடக சந்திப்பிலேயே

11



## ஜே.வி.பி. பொது செயலரை சந்தித்தார் இந்திய தூதுவர்

கொழும்பு, ஏப். 23

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஆளும் கட்சியின் தாய்க் கட்சியான ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வாவை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வருகைக்கு பின்னராக இரு நாடுகளின் உறவுகளில் ஏற்பட்ட உத்வே கம் தொடர்பில் இந்த சந்திப்பில்

11

## தமிழர்கள்மீது ஜே.வி.பி. காட்டும் அக்கறை எது?

### செல்வம் எம். பி. கேள்வி

மன்னார், ஏப். 23

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களாகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்களில் இதுவரை கவனம் செலுத்தவில்லை. தமிழ் மக்கள்மீது அக்கறை கொண்டவர்கள் என்று சொல்பவர்கள் அதை கவனத்தில் எடுக்கவில்லை. ஐ. நா. சபை தீர்மானத்தை உடனடியாக அமுல்படுத்த முடியாதென்று கூறினீர்கள். இதுதான் தமிழர்கள்மீது நீங்கள் காட்டுகிற அக்க றையா? - இவ்வாறு வன்னி மாவட்ட

11

## ஒருநாள் காய்ச்சலால் குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், ஏப். 23

பிறந்து 5 மாதங்களேயான பெண் குழந்தை ஒன்று காய்ச்சல் காரணமாக நேற்று உயிரிழந்தது.

உரும்பிராய் மேற்கை சேர்ந்த தரின் பவிசா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

11

## ஜனநாயகத்தை புதைத்துவிட்டு தேர்தல் நடத்தப்படவுள்ளது!

### தமிழ் மக்கள் கூட்டணி சாடல்

யாழ்ப்பாணம், ஏப். 23

"ஜனநாயகத்தை கேவலப்படுத்தி - குழிதோண்டி புதைத்துவிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி தேர்தலை நடத்தவுள்ளது" - இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணி குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்தக் கட்சியின் வி. மணிவண்ணன்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசர் பிரான்சிஸ் முழு உலகினருக்கும் ஆன்மீக தலைவராக அரும்பணியாற்றினார்

## யாழ். மாவட்ட குரு முதல்வர் இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 23

இறைவனடி சேர்ந்த பரிசுத்த பாப்பரசர் கத்தோலிக்கர்களுக்கான தலைவராக மட்டுமல்லாமல் முழு உலகத்தவர்களுக்குமான ஆன்மீக தலைவராக கடந்த 10 ஆண்டுகளில் அரும்பணியாற்றியவர் என்று யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.



பரிசுத்த பாப்பரசரின் மறைவு குறித்த தனது இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், இறைவன் அவரின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றை அளிக்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன். போப் பிரான்சிஸை அறியாதவர்கள் யாரும் கிடையாது. ஆர்ஜென்ரீனா நாட்டை சேர்ந்த அவர் தென்னமெரிக்க நாட்டின் முதலாவது திருத்தந்தையாக தெரிவுசெய்யப்பட்டார். தனது பணிவாழ்வை அவர் வித்தாயசமான விதத்தில் ஆற்றியமையும் நமக்குத் தெரியும்.

அதேசமயம் புதிய திருத்தந்தையர்கள் தெரிவுசெய்யப்பட்டவுடன், வத்திக்கான் சதுக்கத்துக்கு வந்து அங்கு கூடியிருக்கும் இலட்சக்கணக்கான மக்களை ஆசிர்வதிப்பார்கள். ஆனால், திருத்தந்தை பிரான்சிஸ் தான் திருத்தந்தையாக தெரிவுசெய்யப்பட்டதும், குறித்த சதுக்கத்தில் வந்து மக்களை ஆசீர்வதிக்கவில்லை. மாறாக மக்களை அவர் பார்த்து நீங்கள் என்னை ஆசீர்வதியுங்கள் பின்னர் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன் என்று தலை வணங்கி மக்களின் ஆசீரைப் பெற்றுக்கொண்டார். இவ்வாறு மக்களிடம் இருந்து ஆசீர்வாதத்தை பெற்றே அவர் தனது பணி வாழ்வை ஆரம்பித்தார்.

அதுமட்டுமின்றி, வத்திக்கானில் அவர் வசித்த இடத்தின் விறாந்தைகள் வழியாக தான் உறங்குவதற்கு முன்னர் நடந்து சென்று அங்கு எரியும் மின் விளக்குகளை அணைப்பதை பாப்பரசர் வழக்கமாகக் கொண்டிருந்தார் அது தொடர்பாக கேட்கின்றபொழுது இங்கு எரியும் மின்விளக்குகளை கொண்டு ஆர்ஜென்ரீனாவில் நான் பணிபுரிந்த இடத்தின் ஒரு கிராமத்துக்கு ஒளி கொடுக்கலாம் என அவர் விளக்கமளித்தார் எனவும் வாசித்திருக்கிறோம்.

இவை வெறுமனே அவர் திருத்தந்தையாக இருந்தபோது செய்த செயல்கள் அல்ல. மாறாக, கடந்த 12 ஆண்டுகளும் அவர் ஓர் எளிமையான வாழ்வையே வாழ்ந்தார்.

"சமாதானம் சாத்தியமானது" என்பதே திருத்தந்தை பிரான்சிஸ் சொன்ன கடைசி செய்தியாக இருக்கிறது. இப்படிப்பட்ட திருத்தந்தையை தந்த இறைவனுக்கு நன்றி சொல்லி அவர் காட்டிய வழியில் நடக்க இறைவன் அருள் செய்வாராக' என்றும் கூறியுள்ளார். (ஐ)

# முன்னணியின் கரங்களை நாம் பலப்படுத்த வேண்டும்!

## சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என்று பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த பாராளுமன்ற தேர்தலை தொடர்ந்து நான் மிகவும் அமைதியாக இருந்தேன். பலரும் என்னை அணுகினார்கள். இருப்பினும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எனது ஆதரவை வழங்கியுள்ளேன்.

தமிழ்த் தேசியத்தை எந்த வித சலனமும் இல்லாது கொண்டு செல்கின்ற ஒரு தரப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே. தற்போது, எமது தேசியத்தை இலங்கை அரசாங்கம் அற்றுப்போக செய்கிறது. மிகக்கூடுதலாக நாம் பலியாகப் போகிறோம்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்காக உழைத்தவர்களை அவர்கள் விலக்கி வைத்தார்கள். ஒரு தனிநபருக்கு இருக்கின்ற நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய அதிகளவு வாக்குகளையும் கருத்தில்கொள்ளாது சில நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. மத்திய குழுவும் அவ்வாறே சென்றுள்ளது.

பலரும் தமிழ் அரசின் தலைமைத்துவ தேர்தலின்போது ஒரு வருக்கு ஆதரவளித்தார்கள். அவரை ஆதரித்தவர்களுக்காக துணிவாக இறங்கி குரல் கொடுக்க வேண்டிய அவர், அதனைத் தவறவிட்டுவிட்டார். தமிழ் அரசு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கட்சியிலிருந்தவர்களை தக்கவைத்திருக்க வேண்டும்.

பெருந்தேசிய கட்சி ஒன்று இன்று கனவிலும் நினைக்க முடியாத அளவிற்கு கால் பதித்துள்ளது. மக்களின் குழப்பத்துக்கு தனியே தேசிய மக்கள் சக்தி மாத்திரம் காரணமல்ல. மாறாக, எம்முடைய பிரிவுகளும் காரணமே. அந்த பிரிவினைவாதங்களை களைந்தெறிந்து ஒரு கோட்பாட்டின் கீழ் முன்கொண்டு செல்வதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் காலத்தின் தேவைக்கு ஏற்ற பணியாகும். பெருந்தேசிய கட்சியை அப்புறப்படுத்த நாம் ஓரணியில் திரள வேண்டும் - என்றார். (ஐ)

# யாழில் வெற்றிகரமாக நடந்த 26ஆவது இரத்ததான முகாம்!



யாழ்ப்பாணம், ஏப். 23

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், கருகம்பனை இந்து இளைஞர் கழகம், கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், விதையனைத்தும் விருட்சமே செயல் திட்டம் ஆகியன நாளைய அதிகாரத்தின் எழுச்சி அமைப்பின் அனுசரணையோடு முன்னெடுத்த 26ஆவது தடவையாக இரத்ததான முகாமை நடத்தியுள்ளன.

கருகம்பனை கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்த இரத்ததான முகாமில் 43 குருதிக் கொடையாளர்கள் குருதி வழங்கினர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியினர் குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். (அ-ஐ- 05)

# எமது கட்சி அமைப்பாளரின் மகன் காரணமின்றி பொலிஸால் கைது!

## கஜேந்திரகுமார் எம். பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 23

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் சற்குணதேவியின் மகனை காரணம் எதுவுமின்றி மருதங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.



இது குறித்து அவர் தனது சமூகவலைத்தளத்தில் தெரிவித்துள்ளவை வருமாறு,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் சற்குணதேவி. பருத்தித்துறை பிரதேச சபைக்கான தேர்தலில் அவர் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை தாக்கல் செய்திருந்தார். எனினும், அது நிராகரிக்கப்பட்டது.

சில நாட்களுக்கு முன்னர் வேட்பாளருக்கான கூட்டமொன்று இடம்பெறவுள்ளதாகவும் அதில் கலந்துகொள்ள வேண்டும் எனவும் மருதங்கேணி பொலிஸார் அவருக்கு உத்தரவிட்டிருந்தனர்.

எனினும், தனது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமையால் அவர் கூட்டத்துக்கு செல்லவில்லை. இந்த நிலையில், இன்று (நேற்று) அவரின் வீட்டுக்கு சென்ற பொலிஸார் ஏன் அந்தக் கூட்டத்துக்கு வரவில்லை என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், தான் தற்போது வேட்பாளர் இல்லை என பதிலளித்தார்.

இதைக்கேட்ட பொலிஸார் அவரை நிந்தித்ததுடன், கூட்டத்துக்கு கட்டாயம் சமுகமளிக்கவேண்டும் எனத் தெரிவித்ததுடன், ஜெகதீஸ்வரன் சற்குணதேவியின் இளைய மகனை எந்தவித காரணமுமின்றி கைது செய்துள்ளனர்.

சற்குணதேவி தனது உறுதியான ஊழலற்ற செயல்பாட்டுக்காக பொலிஸாரின் துன்புறுத்தல்களை பல முறை எதிர்கொண்டுள்ளார். அவரின் கணவர், மகன் மற்றும் எங்கள் கட்சியின் ஏனைய உறுப்பினர்களுக்கு எதிராக பொலிஸார் பலமுறை பொய் வழக்குகளை தாக்கல் செய்த பின்னர் விடுதலை செய்துள்ளனர் - என்றும் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-05)

# யாழில் ஹெரோயினுடன் இளைஞர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 23

ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர்கள் இருவர் யாழ்ப்பாணம் - பொம்மைவெளி பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதான சந்தேக நபர்களிடம் இருந்து 620 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# மூளைக்காய்ச்சலால் யுவதி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 23

மூளைக்காய்ச்சலால் தெல்லிப்பழையை சேர்ந்த யுவதி ஒருவர் உயிரிழந்தார்.

தெல்லிப்பழை - கட்டுவன் - வீமன்காமம் பகுதியை சேர்ந்த சுவிந்தன் சாமினி (வயது 22) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த யுவதி, கடந்த 14ஆம் திகதி காய்ச்சல் காரணமாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ -05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.04.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணில் பற்றிய ராஜிதவின் ஆருடம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் சில மாதங்களில் மீண்டும் ஜனாதிபதியாக மகுடம் சூடுவார் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கிறார் - ராஜிதவின் ஆருடம் பலிக்குமா? அரசியலில் ஆருடங்கள் பொருத்தமானவை அல்ல. ஆனால், அரசியலில் எப்போது, எவ்வாறான மாற்றங்கள் இடம்பெறுமென்று எவராலும் துல்லியமான எதிர்வுகூறல்களை செய்யவே முடியாது. கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சி, அதனைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க திடீரென்று ஜனாதிபதியானமையை இதற்கான சிறந்த உதாரணமாக நோக்கலாம்.

ரணில் எவ்வாறு மீண்டும் ஜனாதிபதியாக வரமுடியும்? ஒருவேளை முன்னரைப் போல், ஏதேனும் அதிசயம் நிகழ்ந்தால் அதற்கான வாய்ப்பு கனியக்கூடும். ஆனால், ஒரு நெருக்கடி இல்லாமல் அரசியலில் திடீர் மாற்றங்கள் எப்போதும் சாத்தியமில்லை. நாட்டின் பொருளாதார நிலைமை மீண்டும் மோசமான கட்டத்தை எட்டி, அதனால் மக்கள் மீண்டும் தெருவுக்கு வரும் நிலைமை ஏற்பட்டால் மட்டும்தான் அவ்வாறான நிலைமை ஏற்படும்.

அவ்வாறானதொரு வரலாற்று நெருக்கடி மீண்டும் ஏற்பட வேண்டுமென்றால் தற்போதைய அநுர குமார தலைமையிலான அரசாங்கம் நெருக்கடியை சமாளிக்க முடியாமல் கையறு நிலைக்குச் செல்ல வேண்டும். அநுரவை நமது தோழர் என்றுகூறி அரியணையில் அமர்த்திய மக்கள் அவருக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட வேண்டும். அவ்வாறானதொரு நிலைமையில், அநுர குமாரவை இந்தியா முற்றிலுமாகக் கைவிட வேண்டும். இந்தியா அநுர குமாரவோடு நிற்குமானால் அவரால் எந்தவொரு நெருக்கடியையும் சந்திக்க முடியும்.

உண்மையில், கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவர் முற்றிலுமாக இந்தியாவை நோக்கிச் சாயவில்லை. பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்பட்டபோது, இந்தியாவின் உதவியை நாடவில்லை. ஒருவேளை இந்தியா கோட்டாபயவுக்கு கைகொடுத்திருந்தால் சிங்கள மக்கள் கோட்டாவுக்கு எதிராகத் திரும்புவதை தணித்திருக்க முடியும். ஏனெனில், சிங்கள மக்கள் கோட்டாபயவுக்கு எதிராக திரும்பியமை அவரின் கொள்கை நிலைப்பாடுகள் தொடர்பான விடயமல்ல. மாறாக, பொருளாதார நெருக்கடியை அவரால் சமாளிக்க முடியாமல் அவர் தோல்வியுற்றபோதுதான் அவருக்கு எதிராக மக்களை அணிதிரட்ட முடிந்தது.

அவ்வாறு அணிதிரண்டவர்கள் அனைவருமே பொருளாதார நெருக்கடியால் அதிருப்தியுற்றவர்கள் - ஆவேசம் கொண்டவர்கள்தான். இதன் காரணமாகவே ரணில் பொறுப்பேற்று விடயங்களை சுமுகமாகக் கொண்டு செல்லத் தொடங்கியவுடன் அறகலய காணாமல் போனது. அறகலயவின்போது என்னவெல்லாம் பேசப்பட்டன? பேசப்பட்ட விடயங்களில் ஏதாவது ஒரு விடயம் நடந்ததா?

மறுபுறம், கோட்டாபய எதிர்ப்பு அறகலயதான் ஜே. வி. பியின் அரசியல் மூலதனமாக இருந்தது. அதனை அவர்கள் திறம்பட பயன்படுத்திக் கொண்டனர். உண்மையில், பொருளாதார நிலைமையை சரிசெய்த பெருமை ரணில் விக்கிரமசிங்கவையே சாரும். ஆனால், அதனை அரசியல் அறுவடையாக்குவதில் அவரால் வெற்றிபெற முடியவில்லை. அதற்கான அரசியல் அடித்தளம், கட்சி கட்டமைப்பு அவரிடம் இருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் ரணில் மீண்டும் அதிகாரத்தில் அமர வேண்டும் என்றால் மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, அப்போது அநுர குமார உலகால் முக்கியமாக, இந்தியாவால் கைவிடப்படுவாரானால் ரணில் தலையில் மகுடம் ஏறும் அதிசயம் நிகழ்ந்தால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

# யாழில் கடவுச்சீட்டு பணிமனை ஓரிரு வாரங்களில் செயல்படும்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணத்தில் இன்னும் ஓரிரு வாரங்களில் கடவுச்சீட்டு பணிமனையை இயங்கச் செய்யும் நோக்கில் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அறிய வருகிறது.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய பணிமனையை யாழ்ப்பாணத்தில் அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியது. இதற்காக யாழ். மாவட்ட செயலகத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தை கடந்த ஜனவரி மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்த அநுர குமார திஸநாயக்க பார்வையிட்டிருந்தார்.

இந்த நிலையில், கடவுச்சீட்டு பணிமனையை அமைக்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனிடையே, 'ஒருநாள் சேவைக்கான வலைத்தள சேவைக்கு' யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காமையால் தென்னிலங்கையில் இருந்து குறித்த சேவை வழங்குநர்கள் பெறப்படவுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்ட குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தில் கடமையாற்ற தேவையான தமிழ் உத்தியோகத்தர்களை அரச திணைக்களங்களில் இருந்து தெரிவு செய்வதற்கான நேர்முக பரீட்சை கொழும்பில் இருந்து வருகை தந்த விசேட குழுவால் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

குடிதண்ணீர் விநியோக திட்டம்

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் பளையில் ஆய்வு

கிளிநொச்சி, ஏப். 23

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பளை தண்ணீர் விநியோகத் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.



கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் வருகை தந்த பிரதிநிதிகள் பளைக்கு சென்று தண்ணீர் விநியோக திட்டத்தை பார்வையிட்டதுடன், மக்களின் கருத்துகளையும் கேட்டறிந்தனர்.

பளை பிரதேசத்தில் பெரும்பாலான பகுதிகளில் குடிப்பதற்கு பொருத்தமற்ற தண்ணீர் காணப்படுகிறது. அத்துடன், வறட்சி காலத்தில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடும் நிலவுகிறது. இந்த நிலையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைகள் தமது நெருக்கடியை தீர்ப்பதாக அமைந்துள்ளது என்றும் மக்கள் இதன்போது சுட்டிக் காட்டினர்.

இதேவேளை, பளையின் பல பிரசேதங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையுடன் தொடர்பு கொண்டு வினவிய போது,

பளை பிரதேசத்துக்கான தண்ணீர் விநியோக நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. எனவே பொது மக்கள் குழாய் வழி குடிதண்ணீரை பெற்றுக்கொள்வதற்கு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்று அதனை பூர்த்தி செய்து வழங்கி உரிய கட்டணததை செலுத்துவதன் மூலம் தண்ணீர் இணைப்பை பெறமுடியும் என்றும் கூறினர்.

(ஐ)

# யாழ். நகரில் கஞ்சா விற்றவர் கைதானார்!


யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். போதனா மருத்துவமனை முன்பாக கஞ்சா போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சுகாதார தொழிலாளி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மருத்துவமனை முன்றலில் கஞ்சா வியாபாரத்தில் ஒருவர் ஈடுபட்டு வருகிறார் என்று பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டார். அப்போது, அவரிடம் இருந்து 25 கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ஆன்மிக பெரியோரின் ஆசி கிட்டும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்கள் புது முயற்சிகளை ஆதரிப்பார்.

**இடபம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். மரியாதை கூடும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் பழைய கசப்பான சம்பவங்கள் நினைவுக்கு வரும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துபோகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**சிம்மம்**
சமயோசிதமாகவும் சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**கன்னி**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகள் தேடி வரும்.

**துலாம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வீடு வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உதவிகள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் தேடி வந்துப் பேசுவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**தனுசு**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். புதிய பாதை தெரியும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலை தூக்கும். சக ஊழியர்களால் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். எதிலும் கவனம் தேவைப்படும்.

**மீனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

# பாப்பரசரின் மறைவுக்கு சிறீதரன் எம்.பி. இரங்கல்!

கிளிநொச்சி, ஏப் 23

பரிசுத்த பாப்பரசரின் மறைவுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பி வைத்துள்ள இரங்கற் குறிப்பில்-

கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் மறைவு, உலகவாழ் மக்கள் ஒவ்வொருவரையும் ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியிருக்கிறது.

கத்தோலிக்க மக்களின் திருத்தந்தை என்ற அடையாளத்தினூடே, தனது திருச்சபை மக்களைக் கடந்து மனுக்குலத்தின் மாட்சிமைக்கான அவரது எண்ணங்களின் மகத்துவத்தை, கொரோனாப் பெருந்தொற்று காலத்தில் அவர் ஆற்றிய மறையுரையின் சாரத்தில் நாம் அறிந்துகொள்ள முடியும்.

கருணையையும், மனித நேயத்தையும், சமாதானத்தையும் விரும்பிய இந்த யுகத்தின் பேரடையாளமாக மறைந்த திருத்தந்தையின் காலமும், பணிகளும் இருந்திருக்கின்றன.

2013ஆம் ஆண்டு, ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்களின் பங்கேற்போடு நடைபெற்ற மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் தலைமைப் பணி ஏற்புத் திருப்பலியில் "உலகத்தில் பொருளாதாரத் துறை, அரசியல் துறை, சமூகத் துறை ஆகியவற்றில் பொறுப்பான பதவியில் இருப்போர் அனைவரும் கடவுளின் படைப்புலகு குறித்து அக்கறை கொண்டிருக்கவேண்டும். உலகத் தலைவர்கள் சுற்றுச்சூழலையும், குழந்தைகளையும், முதியோர்களையும், துன்பத்தில் உழல்வோரையும் பாதுகாக்கக் கடமை கொண்டுள்ளார்கள்" என்றுரைத்த அவரது வார்த்தைகள் உலகை வழிநடத்தும் பரிவும், பக்குவமும் அவருக்கிருப்பதை அடையாளப்படுத்திற்று.

மதங்களைக் கடந்த மனித நேயத்தின் அடையாளமாக, சமாதானத்தின் தூதுவனாக இறைபணி ஆற்றிய கத்தோலிக்க திருச்சபையின் திருந்தந்தை பிரான்சிஸ் அடிகளாரின் மறைவின் துயர்சுமந்த எமது மக்களோடு நானும் இணைந்திருக்கிறேன் - என்றுள்ளது. (அ-05)

# பாப்பரசருக்கு வவுனியாவில் அஞ்சலி!


வவுனியா, ஏப். 23

பாப்பரசர் பிரான்சிஸூக்கு வவுனியா காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸ்சிஸ் வத்திகானில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பல்வேறு பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்கள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் வவுனியா தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

அவர்கள் தொடர் போராட்டம் மேற்கொண்டுவரும் வீதி




அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக உள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரது திருவுருவப் படத்துக்கு தீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

# கும்பழாவளை பிள்ளையார் ஆலயத்தின் மஹோற்சவம் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 23

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலய இந்த வருட மஹோற்சவம் மற்றும் தொண்டர் சபை செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு தொண்டர் சபை செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கும்பழாவளை பிள்ளையார் ஆலய தொண்டர் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கும்பழாவளை பிள்ளையார் கோயில் தொண்டர் சபை செயலாளர் க.கஜானன் அறிவித்துள்ளார்.

(அ-02)

# 6ஆவது முறையாக கூடிய உணவுப் பாதுகாப்புக் குழு!

கொழும்பு, ஏப். 23

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக உணவுப் பாதுகாப்புக் குழு 6 ஆவது முறையாக நேற்று முன் தினம் கூடியது.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ. லால் காந்த, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார மற்றும் அமைச்சுகளின் செயலாளர்களைக் கொண்ட உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கணினி தொழிற்பயிற்சி நிலையம் திறந்து வைப்பு

கிளிநொச்சி, ஏப். 23

கிளிநொச்சி - பூநகரியில், பூநகரி பிரதேச சபை பொது நூலக அனுசரணையுடன், வெண்கரம் அமைப்பினால் கணினி தொழிற்பயிற்சி நிலையம் உத்தியோபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேவை உடைய பிரதேசங்களில் வாழும் மாணவர்களுக்கு தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுப்பதனூடாக அவர்களை வேலை உலகுக்கு தயார்ப்படுத்தும் இலக்குடன் தொழிற்பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டு, கணினி பயிற்சி நெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பூநகரி பிரதேசசபை பொது நூலக நூலகர் தி.செல்வக்குமார் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பூநகரி பிரதேச செயலக செயலாளர் தி.அகிலன், பூநகரி பிரதேச சபை செயலாளர் இ.தயாபரன், வெண்கரம் அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் சுகுணராணி சண்முகேந்திரன், தொழிற் பயிற்சி நிலைய இயக்குனர் ம.நந்தகுமார் வெண்கரம் செயற்பாட்டாளர் மு.கோமகன், கணினி பயிற்சி நெறி போதனாசிரியர், நூலக உதவியாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த பாப்பரசர் பதவிக்கு போட்டியாளர் எவரும் இல்லை

## இலங்கை கத்தோலிக்க திருச்சபை

கொழும்பு, ஏப். 23

**பரிசுத்த பாப்பரசர் பதவிக்கு போட்டியாளர்கள் என எவரும் இல்லை என இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

அடுத்த பாப்பரசர் பதவிக்கான போட்டியாளர்களில் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் ஒருவர் என ஊடகங்களில் வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் இதனை கூறினார்.

பாப்பரசர் பதவிக்கு போட்டியாளர்கள் என எவரும் இல்லை.

கர்தினால்கள் குழு வில் உள்ள 252 பேரில் எவரை யும் புதிய பாப்பரசராக தெரிவு செய்யலாம் என அவர் தெரிவித்தார்.

வாக்களிக்கத் தகுதியான 117 பேர் புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்காக வாக்களிப்பார்கள் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அடுத்த பாப்பரசரை தெரிவு செய்யவுள்ள கர்தினால்கள் மத்தியில் கர்தினால் மல்கம் ரஞ்சித் பிரபலமானவர் என தேசிய கத்தோலிக்க தொடர் பாடல் இயக்குநர் ஜூட் கிறிசாந்த தெரிவித்துள்ளார். (அ)

# திருத்தந்தைக்கு பிக்குகள் பிரார்த்தனையுடன் அஞ்சலி



கொழும்பு, ஏப். 23

நித்திய இளைப்பாறுதல் அடைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்/க்கு பனகல உப திஸ்ஸ தேரர் தலைமையிலான பௌத்த மத குருமார்கள் குழு பிரார்த்தனையுடன் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் பக்கவாதம் மற்றும் இதய செயலிழப்பு காரணமாக தனது 88 வயதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நித்திய இளைப்பாறுதல் அடைந்தார்.

அவரின் மறைவுச் செய்தி வெளியாகி சில மணி நேரங்களுக்குப் பின்னர் கம்பஹா, மக்கோல பகுதியிலுள்ள விகாரையில் பாப்பரசர் பிரான்சிஸ்/க்கு மலர் அஞ்சலி செலுத்தி பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியை அழிப்பதே ரணிலின் திட்டம்

## எஸ்.எம். மரிக்கார் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 23

ஐக்கிய மக்கள் சக்தியை முற்றாக அழிப்பதே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக இருந்தது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவது நல்ல விடயம். ஆயினும் ஐக்கிய தேசிய கட்சி சொல்வதைப் போல எமக்கு செய்ய முடியாது.

எமது தலைமைத்துவத்தின் கீழேயே பேச்சுவார்த்தைகள் இடம்பெறவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அதனை தடுப்பதே ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணமாக இருந்தது.

அதுமாத்திரமல்லாது கொழும்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளராக சாகர காரியவசத்தை நியமிக்கவேண்டும் என ரணில் விக்கிரமசிங்க நினைத்தார். அது பொருத்தமற்றது.

ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்கு வங்கி கிடையாது. ஆதலால் ஐக்கிய மக்கள் சக்தியை இணைத்துக்கொண்டு தன்னைப் பலப்படுத்திக் கொள் ளவே அவர் விரும்பினார்.இரு தரப்பு பேச்சுவார்த்தை களின்போது பெயரிடப்படாத நபர்கள் ஐக்கிய தேசிய கட்சி யின் சார்பில் கலந்துகொண்டி ருந்தனர். நாம் பொம்மைகளாக இருக்க மாட்டோம் என்பதை தெளிவாகக் கூறியுள்ளோம்-என்றார்.

# கட்டுநாயக்கவில் துப்பாக்கி சூடு!

கொழும்பு, ஏப். 23

கட்டுநாயக்க, ஆடியம்பலம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூட் டுச் நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதா கவும், துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மோட்டார் சைக்கி ளின் சாரதியை கைது செய்த பொலிஸார், மோட்டார் சைக் கிளையும் கைப்பற்றினர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வெட்டு காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஏப். 23

மொனராகலை, கதிர்காமம், சித்துல்பவ்வ வீதியில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் இந்த சுற்றுலா விடுதியில் பணியாளராக கடமையாற்றியவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்

இந்த சுற்றுலா விடுதியின் உரிமையாளர் கொழும்பு பிரதேசத்தில் வசிப்பதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலத்தில் பல வெட்டுக் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது கொலையாக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ)

# பிள்ளையான் மூலம் பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்தும் அநுரவின் முயற்சி தோல்வி!

## கூறுகின்றார் உதய கம்மன்பில



கொழும்பு, ஏப். 23

"பிள்ளையானை கைது செய்து, அவர் வழங்கிய வாக்குமூலம் என்ற அடிப்படையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரதான சூத்திரதாரியொருவரை உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சி தோற்கடிக்கப்பட்டுள்ளது."

-இவ்வாறு பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும், பிள்ளையானின் சட்டத்தரணியுமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு பொறுப்பு கூறவேண்டிய நபர்கள் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னதாக பகிரங்கப்படுத்தப்படுவார்கள் என மார்ச் 30 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இன்று ஏப்ரல் 21 ஆம் திகதி? ஆனால் அப்படியொரு வெளிப்படுத்தல் ஜனாதிபதியால் செய்யப்படவில்லை. அந்த அடிப்படையில் மற்றுமொரு உறுதிமொழியை அரசாங்கம் மீறியுள்ளது.

பிள்ளையானைக் கைது செய்து, அவர் வழங்கிய வாக்குமூலம் என்ற அடிப்படையில் தமது மனதில் உள்ள பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்தவே அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

அதனால்தான் பிள்ளையானை சந்திப்பதற்கு எவருக்கும் இடமளிக்கப்படவில்லை. சந்தேக நபர் ஒருவருக்குள்ள உரிமைகள்கூட மறுக்கப்பட்டன. பிள்ளையானின் கைது தொடர்பில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்புபடுத்தப்பட்டது.

இதனால்தான் சட்டத் துருப்பை பயன்படுத்தி பிள்ளையானை, சந்தித்து அரசாங்கத்தின் திட்டத்தை முறியடித்தோம். பிரதான சூத்திரதாரியை உருவாக்கும் முயற்சியை இல்லாது செய்ய முடிந்தது.

சஹ்ரான்தான் பிரதான சூத்திரதாரியென அமெரிக்காவின் எவ்.பி.ஐ கூட கூறியுள்ளது-என்றார். (அ)

# அஞ்சல் மூல வாக்களிப்புக்கு அலுவலக அடையாள அட்டை ஏற்கப்படுவதில்லை

## தேர்தல் ஆணையாளர் நாயகம்

கொழும்பு, ஏப். 23

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பின்போது, ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமாக அலுவலக அடையாள அட்டை ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமாக அலுவலக அடையாள அட்டை யைச் சமர்ப்பிப்பதற்கான தெரிவு முன்னதாக வழங்கப்பட்டிருந்த போதிலும், கடந்த காலங்களில் பதிவான சில சம்பவங்களைக் கருத்திற்கொண்டு இம்முறை அது தவிர்க்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே, அலுவலக அடையாள அட்டையை ஆள் அடையாள ஆவணமாகச் சமர்ப்பிக்கின்ற அஞ்சல் வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டை அடையாளமிட வாய்ப்பளிக்கக்கூடாதெனத் தேர்தல் தெரிவித்தாட்சி அலுவலர்களைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்புக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடையாள அட்டையை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் கடவுச்சீட்டு, தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதம் ஆகிய ஆவணங்களில் ஏதேனும் ஒன்று அஞ்சல் மூல வாக்களிப்பின்போது ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24, 25, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சில மாதங்களில் ரணில் ஜனாதிபதியாக வருவார்

## கூறுகிறார் ராஜித சேனாரத்ன



கொழும்பு, ஏப். 23

**வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக்கூடிய ஒரே தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனவும் அவர் சில மாதங்களில் ஜனாதிபதியாக வருவார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டின் பொருளாதாரம் இப்போது சரிந்து கொண்டிருக்கிறது. அப்போது அதை மீண்டும் யார் கட்ட முடியும் என்பதை மக்கள் நினைவில் கொள்வார்கள்.

கோத்தபய இரவில் குழியில் விழுந்தார். பகலில் அநுர குழியில் விழுந்தார். காலையில் சஜித்துடன் விழத் தயாராக இருக்கும் மூளை உள்ளவர்கள் இலங்கையில் யாரும் இல்லை.

அப்படியானால் மீதமுள்ள ஒரே தீர்வு ரணில் விக்கிரமசிங்கவே. வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக்கூடிய ஒரே தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே

நான் எப்போதும் சொல்வேன், ரணில் விக்கிரமசிங்கவின் முகத்தைப் பார்க்காதீர்கள். அவர் கையை அசைக்கும் விதம் அல்லது மக்களின் தோள்களைத் தொடும் கையைப் பற்றிப் பேசாதீர்கள்.

அவரது மண்டைக்குள் இருக்கும் மூளையைப் பாருங்கள். அவரிடம் வேறு எதுவும் இருந்தாலும் பயனில்லை, அந்த மூளை இல்லாமல், இந்த நாட்டை நெருக்கடியிலிருந்து கட்டியெழுப்ப முடியும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே தலைமை உள்ளது.

அந்த சுயபலத்துடன் நாங்கள் போராடுகிறோம். இந்தத் தேர்தலில் நாங்கள் முன்னேறி வருகிறோம்.

பெரிய வெற்றி கிடைக்கா விட்டாலும், எங்கள் வெற்றி தெரியும். எங்கள் நாடு வெற்றி பெறும். இந்த வெற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியாகும்-என்றார்.

(அ)

# வீடு கட்டும் மானியத் தொகையை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப். 23

"உங்களுக்கு வீடு - நாட்டுக்கு நாளை" வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு வழங்கப்படும் அரச மானியத் தொகையை உயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வறுமையில் உள்ள அல்லது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீட்டு வசதிப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும், அதனுடன் தொடர்புடைய வறுமையை குறைப்பதற்கும் இந்த வீட்டு வசதித் திட்டம் நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் வறுமையில் உள்ள அல்லது குறைந்த வருமானம் பெறும் ஒரு குடும்பம் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, வீடு கட்டுவதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு கட்டுமான முன்னேற்றத்தின் அடிப்படையில் மானியத் தொகை வழங்கப்படுகிறது.

தெரிவு செய்யப்படும் பயனாளி, குறைந்தபட்சம் 550 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடு ஒன்றை கட்டவேண்டும். இதற்காக அரசு வழங்கும் 650,000 ரூபாய் மானியத் தொகைக்கு மேல், மீதமுள்ள செலவை பயனாளி ஏற்க வேண் டும்.

திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது ஒரு வீட்டின் மதிப்பீட்டு செலவு 1,147,000 ரூபாயாக இருந்தது. ஆனால், தற்போது இந்த செலவு 1,764,000 ரூபாய் ஆக உயர்ந்துள்ளது.

அரச மானியத் தொகைக்கு மேல் மீதமுள்ள செலவை ஏற்க தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பொருளாதார நிலைமைக்கு அமைய சாத்தியமில்லை என்பதால், தற்போது வழங்கப்படும் 650,000 ரூபாய் மானியத் தொகையை 1,000,000 ரூபாய் ஆக உயர்த்துவதற்கு நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீட்டு வசதி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(அ)

# நீர்வழி போக்குவரத்தை மேம்படுத்த அரசு திட்டம்

கொழும்பு, ஏப். 23

அரச தனியார் பங்குடமையின் கீழ் நீரோட்டங்களைப் பயன்படுத்தி சுற்றுலா மற்றும் பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அராசங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எமது நாடு நீர்மூலங்கள் மற்றும் நீரோட்டங்களுடன் கூடிய தீவாக இருப்பதால் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காகவும், நகர்ப்புற பிரயாணிகள் போக்குவரத்துக்காகவும் குறித்த நீர்மூலங்கள் மற்றும் நீரோட்டங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்தலாம்.

அதனால் எமது நாட்டின் கடலோரத்தையும் நாட்டின் உள்ளகரீதியாகக் காணப்படும் நீரோட்டங்களையும் பயன்படுத்தி ஒரு சில பிரதேசங்களை உள்ளடக்கி படகுச் சேவைகளை ஆரம்பிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க புத்தளம் - கோட்டை, கோட்டை - காலி, காலி - மாத்தறை கடல்வழிப் போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்கும் அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதன் மூலம் சுற்றுலாத்துறை மேம்பாடு மற்றும் பயணிகள் போக்குவரத்துக்கான வசதிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் ஹமில்டன் கால்வாய், பேர வாவி, தியவன்னா ஓயா மற்றும் மாது கங்கை போன்ற ஆற்றல் வளங்களைப் பயன்படுத்தி உள்ளக நீர்வழிப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதன் மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது- என்றார்.

(அ)

# இஸ்லாமிய தீவிரவாத சக்திகளை முற்றாகத் தோற்கடிக்கவேண்டும்!

## ஞானசார தேரர் கோரிக்கை



கொழும்பு, ஏப். 23

உயிர்த்த ஞாயிறுதாக்குதலில் உயிரிழந்தவர்களிற்கு உண்மையான நீதியை வழங்கவேண்டும் என்றால் நாட்டில் புற்று நோய் போன்று பரவிவரும் இஸ்லாமிய தீவிரவாத சக்திகளை முற்றாக தோற்கடிக்க வேண்டும் என பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசாங்கம் அவ்வாறான திட்டம் எதனையும் முன்னெடுப்பதாக தெரியவில்லை என குறிப்பிட்டுள்ள அவர், உயிர்த்த ஞாயிறுதாக்குதலின் சூத்திரதாரியை கண்டுபிடிப்பதாக பல மேடைகளில் வாக்குறுதியளிக் கப்பட்டபோதிலும்,இதுவரை அதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை எனவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சர்வதேச பயங்கரவாதத்துடன் 1990 முதல் தொடர்புகளை பேணிவந்த குழுக்கள்- இதற்காக பயிற்சி எடுத்தவர்கள், இந்த நோக்கத்துக்காக இளைஞர்களை வெளிநாட்டுக்கு அனுப்பியவர்கள் என அனைவரும் வெட்கமற்று இந்த அரசாங்கத்துடன் தொடர்ந்தும் இணைந்துள்ளனர்.

ஏப்ரல் 11ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுதாக்குதல் சூத்திரதாரி குறித்த விவரங்களை வெளியிடுவேன் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணம், நுவரெலியாவில் ஆற்றிய உரைகளில் ஜனாதிபதி நாட்டில் இனவாதத்துக்கு இடமில்லை என குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதி இனவாதம் என குறிப்பிடுவது எதனை? ஜனாதிபதி இனவாதம் மற்றும் மத அடையாளம் குறித்து தெளிவுபடுத்தவேண்டும்.

அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரசியல் மயப்படுத்தக்கூடாது. உயிர்த்த ஞாயிறுதாக்குதலை அரசியல் மயப்படுத்தினால் அது உண்மையான குற்றவாளிகளை மறைப்பதற்கு உதவலாம்-என்றார்.

(அ)

கெஹலியவுக்கு எதிரான வழக்கு

# மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வை அமைக்க சட்டமா அதிபர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 23

தரமற்ற இம்யூன் குளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்தமை தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான வழக்கை விசாரிக்க மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒன்றை அமைக்குமாறு சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதம நீதியரசரிடம் எழுத்துபூர்வ கடிதம் மூலம் சட்டமா அதிபர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக கெஹெலிய ரம்புக்வெல 07 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அதன் பின்னர் அவருக்கு 2024 செப்ரெம்பரில் பிணை வழங்கப்பட்டது.

இரண்டு மூத்த அரச அதிகாரிகளின் உதவியுடன் போலி ஆவணங்களை உருவாக்கி 22,500 தரமற்ற இம்யூன் குளோபுலின் தடுப்பூசி குப்பிகளை ஒரு மருந்து நிறுவனம் இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து சி.ஐ.டி. விசாரணையைத் தொடங்கிய பின்னர், அவர் பல சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கெஹெலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில், மேற்படி தரமற்ற மருந்தை இறக்குமதி செய்ததன் மூலம் ரூ.130 மில்லியன் நிதி மோசடி நடந்துள்ளதாக விசா[illegible]

# குரங்குகள் தொடர்பாக மீண்டும் கணக்கெடுப்பு!

கொழும்பு, ஏப். 23

குரங்குகள் தொடர்பாக மீண்டும் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரட்ன இந்த விடயத்தை ஊடகங்களிடம் தெரிவித்தார்.

நாட்டில் இரண்டாம் கட்டமாக மீண்டும், குரங்குகள் உள்ளிட்ட விவசாய நிலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வனவிலங்குகள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரட்ன தெரிவித்தார்.

விலங்குகள் கணக்கெடுப்பு தொடர்பாக அமைச்சின் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டாம் கட்ட கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை எனவும் எதிர்வரும் நாட்களில் இக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் முதல் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் ஊடாக தீர்மானங்களை எடுக்காது இரண்டாம் கட்ட கணக்கெடுப்பையும் மேற்கொண்டு தீர்மானம் எடுக்கப்பட உள்ளதாக பிரதி அமைச்சர் நாமல் கருணாரட்ன மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய், மோசடி மூலம் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளது அநுர அரசாங்கம்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 23

**ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பொய், மோசடி மூலம் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் பெலியத்த தேர்தல் தொகுதியில் நடைபெற்ற பிரதேச மட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி அரசாங்கத்தின் வெற்று வாக்குறுதிகளை வழங்கும் அரசியலால் இன்று வளமான நாட்டையும் அழகான வாழ்க்கையையும் உருவாக்கும் நடவடிக்கை சீரழிந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களில் பொய் மற்றும் ஏமாற்று வேலைகளை செய்து மக்களை ஏமாற்றிய போதாக்குறைக்கு தற்போது உள்ளூராட்சித் தேர்தலிலும் அதனையே முன்னெடுத்து கிராமத்தில் தமது பொய்யர்களுக்கு அதிகாரத்தை பெற்றுத் தருமாறு கோரி வருகின்றனர்.

எனவே மூன்றாவது தடவையாகவும் இவர்களிடம் ஏமாறப் போகிறீர்களா?

மேலும், இரண்டு இலட்சத்து 63 ஆயிரம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் மூடப்பட்டுள்ளன. தமது முதலாவது வரவு-செலவுத் திட்டத்திலே 35,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருவருக்கு கூட வேலை வழங்கப்படவில்லை. வறுமையை ஒழிக்க புதிய திட்டம் ஒன்றை முன்வைப்பதாகவும் உறுதியளித்தனர், ஆனால் அதுவும் நடக்கவில்லை.

பொய், மோசடி மூலம் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். குடும்ப வருமானம் பரவலாக குறைந்து காணப்படுகின்றது. பலர் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர்-என்றார். (அ)

# காரைநகர் படகு கட்டும் தளத்தை சீரமைக்க முடிவு

கொழும்பு, ஏப். 23



யாழ்ப்பாணம் - காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைப்புச் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைப்புச் செய்வதற்கு, இந்திய அரசின் நன்கொடையைப் பெற்றுக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் கருத்திட்டத்திற்கான தொழிநுட்ப சேவைகளை வழங்குவதற்கான பொறுப்பும் மற்றும் குறித்த நன்கொடைக்கான பொருட்கள் மற்றும் உகரணங்களுக்கான வரி விடுவிப்புக்களுக்கான பொறுப்பும் இலங்கை அரசுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, குறித்த கருத்திட்டத்தின் ஆலோசகராக பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், இலங்கை அரசால் பொறுப பேற்கின்ற செலவுகளுக்காக 40 மில்லியன் ரூபாய்களை திறைசேரியிலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கும், கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் எகிறும் தேர்தல் விதிமீறல்கள்

கொழும்பு, ஏப். 23

உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில், 20ஆம் திகதியிருந்து 20ஆம் திகதி வரை 2011 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 137 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், இதுவரை தேர்தல் குறித்த ஒரு வன்முறை சம்பவம் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப் பெற்றுள்ளது.

அதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 1642 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 369 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (அ)

# 123,945 சுற்றுலா பயணிகள் ஏப்ரல் மாதத்தில் வருகை!

கொழும்பு, ஏப். 23

2025 ஏப்ரல் 20 நிலவரப்படி இந்த ஆண்டு மொத்தம் 846,221 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.

சுற்றுலா மேம்பாட்டு பணியகம் வெளியிட்டுள்ள அண்மைய தரவுகளின்படி, ஏப்ரல் மாதத்தின் முதல் 20 நாட்களில் மட்டும் 123,945 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் இருந்து அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, அந்த எண்ணிக்கை 24,776 ஆகும்.

இதற்கு மேலதிகமாக ஐக்கிய இராச்சியத்திலிருந்து 14,060 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யா மற்றும் ஜேர்மனியில் இருந்து முறையே 10,873 மற்றும் 9,387 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (அ)

# அரசாங்கத்தின் பொய் நாடகங்களுக்கு இனியும் மக்கள் ஏமாறப் போவதில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 23

ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ஆனால் ஆட்சியேற்று 6 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை சூத்திரதாரியை இந்த அரசாங்கத்தால் இனங்காண முடியாமல் போயுள்ளது. அரசாங்கத்தின் பொய் நாடகங்களுக்கு இனியும் மக்கள் ஏமாறப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

களுத்துறையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்ற போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராகக் காணப்பட்டார். 2018 இல் ரஞ்சித் மத்தும பண்டார அந்த அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். மைத்திரிபால சிறிசேன, அவரது அதிகாரிகள், புலனாய்வுப்பிரிவின் பிரதானி உள்ளிட்டோரின் தவறால் இந்த சதித்திட்டத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது.

நாட்டில் பாரிய அழிவொன்று ஏற்பட்டது. அனைத்து இன மக்களும் இந்த அழிவால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியையே எதிர்பார்க்கின்றனர். வெளிநாட்டவர்கள் உட்பட நாட்டிலுள்ள மூவின மக்களும் இந்த சதியால் கொல்லப்பட்டுள்ளனர். இதன் பிரதான சூத்திரதாரி கைது செய்யப்பட வேண்டும்.

தாம் ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆனால் ஆட்சி யேற்று 6 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை சூத்திரதாரியை இந்த அரசாங்கத்தால் இனங்காண முடியாமல் போயுள்ளது. ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை நான் வெளிப்படுத்துவேன் என மார்ச் 21ஆம் திகதி ஜனாதிபதி கூறினார்.

ஆனால் இன்று இது தொடர்பில் முழுமையான தகவல்களை தன்னால் கூற முடியாது என்றும், விசாரணைகள் சற்று தாமதமடையும் என்றும் கூறுகின்றார். ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு கையளித்துள்ளமையை பெரிய விடயமாக அவர் கூறிக் கொண்டிருக்கின்றார். கடந்த 6 மாதங்களில் இவற்றை குற்றப்புலனாய்வு பிரிவிடம் கையளிக்கவில்லையா? 180 நாட்களாக இதனை மாத்திரமா செய்து கொண்டிருந்தனர்?

இந்த அறிக்கைகளை ஏற்கனவே பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அதில் சில பக்கங்கள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் அவையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறிருக்கையில் அதனை மீண்டும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் சமர்ப்பிப்பதன் ஊடாக ஜனாதிபதி என்ன கூற முற்படுகின்றார்? அரசாங்கத்தின் இதுபோன்ற நாடகங்களுக்கு இனியும் மக்கள் ஏமாறப் போவதில்லை-என்றார். (அ)

# பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் விசேட குழு நிறுவ அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப். 23

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக விசேட குழுவை நிறுவ அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நடுத்தர கால வேலைச்சட்டகத்தின் மொத்தத் தேசிய உற்பத்தியின் 5 வீதத்திற்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டை அடைவதற்கு முதலீடுகளுக்கு நேயம்மிக்க கொள்கை வகுப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல்கள் மீது அரசு கவனம் செலுத்தியுள்ளது.

ஆயினும், கடந்த சில தசாப்தங்களாக தனியார் முதலீடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் அரசின் முதலீடுகள் மொத்தத் தேசிய உற்பத்தியின் 5 வீதமாக மாத்திரம் இருக்கின்றமையாலும் எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு தனியார் முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, வினைத்திறன் மற்றும் தேசிய பொருளாதார நோக்கங்கள் மீது கவனம் செலுத்துவதை உறுதிப்படுத்தி பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கொள்கைக் கலந்துரையாடல்கள் மேற்பார்வைப் மற்றும் அவற்றுக்கான வசதிப்படுத்தல்களுக்கு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவை நிறுவுவதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு பாலர்சேனையில் உடைக்கப்படும் சங்குல குளம்!

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்



மட்டக்களப்பு, ஏப். 23

**மட்டக்களப்பு - ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலர்சேனை பகுதியிலுள்ள சங்குல குளம் ஒரு சில தனி நபர்களினால் உடைக்கப்படுவதாக தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் செங்கலடி பிரதேச செயலகம் முன்னர் இடம்பெற்றது.


செங்கலடி சந்தி பிரதான வீதி - சந்தியில் ஒன்றினைந்த இலுப்படிச்சேனை கிராம மக்கள் பேரணியாக செங்கலடி பிரதேச செயலகம் வரை சென்று செங்கலடி பிரதேச செயலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், செயலக வளாகத்துள்ளும் நுழைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, "குளத்தை உடைப்பதை நிறுத்து", "அரச அதிகாரிகளே எமது பிரச்னைக்கு தீர்வு காணுங்கள்", "அரசே எமக்கு உதவு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இதேவேளை, ஆர்ப்பாட்ட இடத்திற்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், இ.ஸ்ரீநாத் ஆகியோர் வருகை தந்திருந்ததுடன் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு அமைப்பாளர் என்.திலகநாதன் உள்ளிட்டோர், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

செங்கலடி பிரதேச செயலாளரர் கே. தனபாலசுந்தரம், ஆர்ப்பாட்டக்கார்களிடம் கலந்துரையாடி சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இதற்கான தீர்வைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்ததையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதேச செயலாளரிடம் தமது மனுவையும் கையளித்து கலைந்து சென்றனர்.

(அ)



# திருமலை மாவட்ட செயலகத்தில் கிராம அலுவலருக்கு செயலமர்வு

திருமலை, ஏப். 23

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு நேற்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ. ஜி. எம் ஹேமந்த குமார அவர்களின் தலைமையில் மாவட்ட செயலக புதிய ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின்போது வாக்களிப்பு நிலையங்களில் கிராம உத்தியோகத்தர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் எஸ். கே. டி. நிரஞ்சனால் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது. மேலும் கிராம உத்தியோகத்தர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தக்க பதிலும் இதன்போது வழங்கப்பட்டது.

இச்செயலமர்வில் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# மின்னல் தாக்கி ஒருவர் பலி!

அம்பாறை, ஏப் 23

அம்பாறை மாவட்ட சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செனவட்டை பிரதேசத்தில் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஒரு பிள்ளையின் தந்தையான சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த முஹமட் முஸ்தபா முஹமட் சியாம் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மற்றொரு நபருடன் வேலையின் நிமித்தம் வயலுக்கு சென்ற நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றது. அவருக்கு அருகில் வயல் வேலையில் ஈடுபட்டவர் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவின் பிரகாரம் பிரதேச மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் - ஜவாஹிர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்ட பின்னர் குறித்த சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது.

(அ)

# நகர அபிவிருத்தி என்னும் போர்வையில் திருமலையில் பொருத்தமற்ற திட்டங்கள்

## சண்முகம் குகதாசன் சுட்டிக்காட்டு

திருமலை, ஏப் 23

கடந்த காலங்களில் நிராகரிக்கப்பட்ட திட்டங்களை நகர அபிவிருத்தி என்ற போர்வையில் அதே இடத்தில் திருகோணமலை நகர் பகுதியில் முன்னெடுப்பது பொருத்தமற்றது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

திருகோணமலை நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் பல விடயங்களை மேற்கொள்ளவுள்ள நிலையில் இவ்வாறான திட்டமிடப்படாத அபிவிருத்தி கோணேசர் கோவில் பகுதி உட்பட கரையோர பகுதிகளுக்கும் பாதக விளைவுகளை ஏற்படுத்தும். குறித்த இந்த 10 ஆண்டு திட்டத்தில் மூன்று விடயங்கள் பாதகமானவை. கோட்டாபய காலத்தில் குறித்த பகுதியில் திட்டம் ஒன்றை முன்வைத்தார். அது நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிராகரிக்கப்பட்டது. ஏன் எனில் அந்த பகுதி தொல்பொருள் பகுதி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை பகுதி என்பதால் வீடமைப்பு திட்டம் சாத்தியமாகாது.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

(அ)

# மயிலத்தமடு பண்ணையாளரின் ஆர்ப்பாட்ட வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஏப். 23

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் பிரச்னை தொடர்பான நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு மீண்டும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைப்பட்டுள்ளது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது குறித்த வழக்கு இம்மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த 2023 ஒக்ரோபர் 8ஆம் திகதி மட்டக்களப்பு-செங்கலடி பகுதிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின்போது, கொம்மாதுறை பகுதியில்-மயிலத்தமடு மாதவனை மேச்சல் தரை பிரச்னைக்குத் தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில்-முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 30 சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

(அ)

# குமரன்கடவை வைத்தியசாலைக்கு கிழக்கு ஆளுநர் கண்காணிப்பு விஜயம்



திருமலை, ஏப். 23

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கோமரங்கடவல பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய ரொஷான் அக்மீமன ஆகியோர் நேற்று முன் தினம் திருகோணமலை மாவட்ட கோமரங்கடவல பிராந்திய மருத்துவமனை மற்றும் பிரதேச சபைக்கு ஒரு குறுகிய கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டனர். கோமரங்கடவல பிராந்திய மருத்துவமனையில் உள்ள பிரச்னைகள் ஆராயப்பட்டு அவற்றை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, அந்தப் பிரச்னைகளைத் தீர்க்க குறித்த பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளும் இதன் போது எடுக்கப்பட்டன.

(அ)


# வாய்க்காலுக்குள் வீழ்ந்த கார்!

திருமலை, ஏப். 23

மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள இருதயபுரம் வாய்க்காலுக்குள் காரொன்று புரண்டு வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கல்முனையிலிருந்து - திருகோணமலை நோக்கி பயணித்த குறித்த காரில் ஏற்பட்ட திடீர் பழுது காரணமாக காரானது வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள வாய்க்காலினுள் வீழ்ந்து



விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இழப்பில் உலக நாடுகள் இலாபம் தேட வேண்டாம்!

## சீனா இப்படி எச்சரிக்கை

பீஜிங், ஏப். 23

**எங்களுடைய இழப்பில் உலக நாடுகள் ஆதாயம் தேட வேண்டாம் என்று அமெரிக்காவுடனான மோதலை முன்வைத்து உலக நாடுகளுக்கு சீனா எச்சரித்துள்ளது. இத்தகைய சமரச முயற்சி சர்வதேச வர்த்தகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கான தீர்வாகாது என்றும் தெரிவித்துள்ளது.**

உலக நாடுகள் சீனாவுடனான வர்த்தகத்தை குறைத்துக் கொள்ளும்படி அமெரிக்கா நிர்பந்தித்து வருவதாக தகவல்கள் வெளியாகி வரும் சூழலில் சீனா இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. மேலும், அமெரிக்காவுடன் இத்தகைய ஒப்பந்தங்களில் ஈடுபடும் நாடுகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சீனா தெரிவித்துள்ளது. அமெரிக்காவுடன் இணங்கி சீனாவின் நலனை விலையாக வைத்து ஒப்பந்தங்களில் ஈடுபடும் நாடுகள் கடைசியில் அமெரிக்கா, சீனா என இருபுறம் இருந்து சங்கடங்களையே சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது.

கடந்த ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், உலகின் பல்வேறு நாடுகள் அமெரிக்கப் பொருட்களுக்கு அதிக இறக்குமதி வரி விதிப்பதாகவும், இனி தங்கள் நாடும் பரஸ்பர வரியை விதிக்கும் என்றும் அறிவித்தார். இதன்போது, சீனாவுக்கு 34 வீத வரி விதிக்கப்பட்டது.

அமெரிக்காவின் அதிரடி வரி விதிப்பு சர்வதேச பொருளாதாரத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதை அடுத்து, சீனா தவிர்த்த அனைத்து நாடுகளுக்குமான வரி உயர்வை 10 வீதமாகக் குறைப்பதாக ட்ரம்ப் அறிவித்தார். அதோடு, சீன பொருட்களுக்கான இறக்குமதி வரியை 245 வீதமாக உயர்த்தினார். இதையடுத்து, சீனாவும் அமெரிக்க பொருட்களுக்கான வரியை 125 வீதமாக உயர்த்தியது.

தொடர்ந்து, அமெரிக்காவின் வரி விதிப்பு நடவடிக்கையை சமாளிக்க, ஐரோப்பிய நாடுகளுடனான ஒத்துழைப்பை அதிகரிக்கவும் சீனா பேச்சு நடத்தியது. மேலும், அயல் நாடுகளுடன் உறவை மேம்படுத்துவதற்கான தனது திட்டத்தையும் சீனா அறிவித்தது.

இந்நிலையில், அமெரிக்காவும் சீன பொருட்களுக்கான இறக்குமதி வரியை இனி உயர்த்தாது என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

மேலும், வரிகள் விதிக்கப்பட்டதிலிருந்து சீனா தொடர்பில் இருப்பதாகவும், அவர்கள் ஓர் ஒப்பந்தத்தை எட்ட முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியதாகவும் ட்ரம்ப் தெரிவித்திருந்தார். அமெரிக்காவுடன் பல்வேறு நாடுகளும் வரி விதிப்பு தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சு நடத்தவுள்ளன.

ஐதரசன் எரிபொருள் அடிப்படையில்

# 1,000 பாகை செல்சியஸ் வெப்பத்தை எட்டும் குண்டை தயாரித்தது சீனா!



பீஜிங், ஏப். 23

ஆயிரம் பாகை செல்சியஸுக்கு மேலான வெப்பத்தை உருவாக்க வல்ல ஐதரசன் எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட அணுசக்தி அல்லாத வெடிகுண்டை சீனா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

சீன விஞ்ஞானிகள் ஐதரசன் எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட அணுசக்தி அல்லாத வெடிகுண்டை உருவாக்கும் சோதனையை கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் அண்மையில் இந்த சோதனையை சீன விஞ்ஞானிகள் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். இதற்கு அணுசக்தி அல்லாத புளோடர்ச் வெடிகுண்டு என்று பெயரிட்டுள்ளனர். இந்த வெடிகுண்டால் ஏற்படும் தீப்பிழம்பு 2 விநாடிகளுக்கு மேல் நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக சீனாவிலிருந்து வெளியாகும் சௌத் சைனா மோர்னிங் போஸ்ட் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வழக்கமாக வெடிகுண்களில் ட்ரை நைட்ரோ டொலுவீன் (டி. என். டி.) என்ற வேதிப்பொருள் சேர்க்கப்படும். ஆனால், இந்த 2 கிலோ எடையுள்ள புளோடர்ச் வெடிகுண்டானது, டி. என். டி. ஏற்படுத்தும் வெடிப்புகளைவிட 15 மடங்கு அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று சீன விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இது எந்த அணுசக்தி பொருளையும் பயன்படுத்தாமலேயே குண்டு வெடித்த இடத்தில் வெப்பநிலை ஆயிரம் பாகை செல்சியஸை எட்டியுள்ளது. இந்த வெடிபொருளை சீன மாகாண கப்பல் கட்டும் கழகத்தின் (சி. எஸ். எஸ். சி.) கீழ் செயல்படும் 705 ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது. மக்னீசியம் அடிப்படையிலான திட நிலை ஐதரசன் சேமிப்பு பொருளைப் பயன்படுத்தி இந்த வெடிகுண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய வெடிபொருள் சீனாவில் எப்படி பயன்படுத்தப்பட போகிறது என்பது குறித்து தெரியவில்லை. இதுதொடர்பாக சீனாவின் இராணுவ படையான மக்கள் சுதந்திர படை (பி. எல். ஏ.) முடிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உக்ரைனுடன் பேச நாம் தயார்!



மொஸ்கோ, ஏப். 23

உக்ரைனுடன் நேரடி போர் நிறுத்த பேச்சுக்கு தயார் என ரஷ்ய ஜனாதிபதி புடின் முதல் முறையாக அறிவித்துள்ளார்.

ஈஸ்டரை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட 30 மணி நேர போர் நேற்றுமுன்தினத்துடன் நிறைவடைந்தது. இதைத் தொடர்ந்து, போர் நிறுத்தத்தை நீடிக்க உக்ரைன் அழைப்பு விடுத்தது.

குறைந்தபட்சம் பொதுமக்கள் வசிக்கும் இலக்குகளைத் தாக்கக்கூடாது என்ற தனது திட்டத்தை உக்ரைன் தொடர்கிறது. மொஸ்கோவிடமிருந்து தெளிவான பதிலை நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக ரஷ்ய ஜனாதிபதி புடின் கருத்துரைக்கையில்,

போர் நிறுத்தம் குறித்து எங்களுக்கு நேர்மறையான அணுகுமுறை உள்ளது. எந்தவோர் அமைதி முயற்சிகளுக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். உக்ரைனும் அதற்கு விரும்புவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று கூறியுள்ளார்.

இதனிடையே, அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் உக்ரைன் அதிகாரிகள் அமைதி பேச்சுக்காக இந்த வாரம் லண்டனில் சந்திக்க உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வத்திக்கானுக்கு வெளியே

# பாப்பரசரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்



வத்திக்கான், ஏப். 23

மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் உடல் வத்திக்கான் நகருக்கு வெளியே அடக்கம் செய்யப்படவுள்ளது.

பாப்பரசர்கள் மறைவுக்குப் பிறகு நல்லடக்க சடங்குகள் மிக விரிவாக நடப்பது வழக்கம். ஆனால், முந்தைய பாப்பரசர்களின் பிரமாண்ட இறுதி சடங்குகளைப் போலல்லாமல் தனது இறுதிச் சடங்கு மிகவும் எளிமையான முறையில் நடைபெற வேண்டுமென்று பாப்பரசர் பிரான்சிஸ் விரும்பினார்.

மற்ற பாப்பரசர்கள் அடக்கம் செய்யப்பட்ட புனித பீற்றர்ஸ் பசிலிக்கா கல்லறையில் அடக்கம் செய்யப்படுவதை விட வத்திகான் நகரத்துக்கு வெளியே உள்ள புனித மேரி மேஜர் பசிலிக்காவில் தன்னை அடக்கம் செய்ய பாப்பரசர் பிரான்சிஸ் விரும்பினார்.

அங்குள்ள கன்னி மரியாளின் உருவத்தின் மீது அவர் கொண்டிருந்த பக்தி காரணமாக இந்த முடிவை அவர் எடுத்தார். பிரான்சிஸ் ஒவ்வொரு முறையும் வெளிநாட்டுப் பயணத்திலிருந்து திரும்பும்போது கன்னி மரியாள் முன்பு பிரார்த்தனை செய்வார். அதே இடத்தில் அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட உள்ளது.

அத்துடன், ஓர் ஆயரின் இறுதிச் சடங்குகளில் கடைப்பிடிக்கப்படும் அதே இறுதிச் சடங்குகள் தனக்கும் பொருந்த வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தார். இதன்படி இறந்த பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச் சடங்கு அவர் விரும்பியபடி 3 கட்டங்களாக நடைபெறும்.

சென். பீற்றர்ஸ் பஸிலிக்காவில் பாப்பரசரின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இறந்த பாப்பரசர்களின் உடல் சைபிரஸ் ஈயம் மற்றும் ஓக் ஆகியவற்றாலான 3 சவப்பெட்டிகளில் ஒன்றின் உள்ளே மற்றொன்று வைக்கப்பட்டது. ஆனால் பாப்பரசர் பிரான்சிஸ் உடல் துத்தநாக விளிம்புடன் கூடிய மர சவப்பெட்டியில் பாதுகாக்கப்படுகிறது. அதில் வைக்கப்படுவதற்கு முன்பு பாப்பரசரின் உடல்மீது மத நடவடிக்கைகளின் போது அவர் அணியும் பாரம்பரிய சிவப்பு அங்கி மிட்டர் என்று அழைக்கப்படும் வெள்ளைத் தொப்பியையும் மத விழாக்களின் போது அவர் அணியும் கம்பளி போன்றவை அணிவிக்கப்படுகிறன.

கடந்த காலத்தில் பாப்பரசரின் சவப்பெட்டி உயர்த்தப்பட்ட மேடையில் வைக்கப்பட்டது. இப்போது. அந்த வழக்கம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தேவாலயத்தில் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் பாப்பரசரின் உடல் தெரியும் வகையில் சவப்பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ் அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்களின்படி அவரின் உடல் வத்திக்கான் நகருக்கு வெளியே அடக்கம் செய்யப்படுகிறது. இந்த நிகழ்வுக்கு கமர்லெக்னோ தலைமை தாங்குகிறார்.

கடந்த 100 ஆண்டுகளில் வத்திகான் நகருக்கு வெளியில் நல்லடக்கம் செய்யப்படும் முதல் பாப்பரசர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இந்துக் கோவிலின்மீது கனடாவில் தாக்குதல்!



றொறன்ரோ, ஏப். 23

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் சர்ரே நகரில் உள்ள லட்சுமி நாராயணன் கோவிலுக்குள் புகுந்த காலிஸ்தான் ஆதரவாளர்கள் இருவர் அங்கிருந்த பொருள்களை உடைத்து சேதப்படுத்தினர்.

கோவில் நுழைவு வாயிலில் உள்ள தூணில் காலிஸ்தான் ஆதரவு வாசகங்களையும் அவர் கள் எழுதிவைத்துச் சென் றனர். முகத்தை துணியால் மூடியிருந்ததால் அவர்களை அடையா ளம் காண முடியவில்லை.

கோவிலில் இருந்து கண்காணிப்பு கமெரா ஒன்றையும் அவர்கள் திருடிச் சென்றனர். இது தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்று கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் காலிஸ்தான் தீவிரவாதி நிஜ்ஜார் கொலை செய்யப்பட்ட பிறகு, இந்தியாவுக்கு எதிராக செயல்படுவதாகக் கூறி கனடாவில் உள்ள இந்து கோவில்களை காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தா அணியை வீழ்த்தியது குஜராத்!

கொல்கத்தா, ஏப். 23

நடப்பு ஐ. பி. எல் தொடரில் 39ஆவது லீக் போட்டியில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியை 39 ஓட்டங்களால் குஜராத் ரைட்டன்ஸ் அணி வீழ்த்தியது.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணியின் தலைவர் ரஹானே பந்து வீச முடிவு செய்தார்.

குஜராத் அணிக்காக தலைவர் /ப்மன் கில், சாய் சுதர்ஷன் இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர். இருவரும் முதல் விக்கெட்டுக்காக 114 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர்.

36 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்து சாய் சுதர்ஷன் ஆட்டம் இழந்தார். 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸரை அவர் விளாசியிருந்தார். கில்லுடன் சேர்ந்து வலுவான கொல்கத்தாவின் பந்து வீச்சாளர்களை பந்தாடினார். தொடர்ந்து ஜோஸ் பட்லர் துடுப்பெடுத்தாட வந்தார். மறுமுனையில் ஆடிய கில் தொடர்ந்து ஓட்டங்களை சேர்த்தார். 55 பந்துகளில் 90 ஓட்டங்கள் எடுத்து அவர் ஆட்டமிழந்தார். 10 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களை அவர் விளாசினார்.

பின்னர் களத்துக்கு வந்த ராகுல் தெவாட்டியா, 2 பந்துகளில் ரன் ஏதும் எடுக்காமல் வெளியேறினார். தொடர்ந்து ஷாருக்கான் துடுப்பெடுத்தாட வந்தார். அவர் 5 பந்துகளில் 11 ஓட்டங்கள் எடுத்தார். பட்லர், 23 பந்துகளில் 41 ஓட்டங்கள் எடுத்தார். 8 பௌண்ட்ரிகளையும் அவர் விளாசியிருந்தார். 20 ஓவர்களில் 198 ஓட்டங்கள் எடுத்தது குஜராத்.

199 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது கொல்கத்தா அணி.

தொடக்கம் கொடுத்த ரஹ்மானுல்லா குர்பாஸ் ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார். மறுமுனையில் ஆடிய சுனில் நரேன் 17 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து இறங்கிய ரஹானே 36 பந்துகளில் அரைச்சதம் விளாசி அணி




யின் ஓட்டத்தை ஏற்ற உதவினார். அடுத்து இறங்கிய வெங்கடேஷ் ஐயர்14, ரிங்கு சிங் 14, ரஸ்ஸல் 21, ராமந்தீப் 1, ரகுவன்ஷி 27 என 20 ஓவர்களில் 159 ஓட்டங்கள் மட்டுமே கொல்கத்தா அணி எடுத்தது. இதன் மூலம் 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றி பெற்றது. (ஐ)




# ஒரேஞ் நிற தொப்பியை தனதாக்கிய சாய் சுதர்சன்!

கொல்கத்தா, ஏப். 23

குஜராத் ரைட்டன்ஸ் அணிக்காக விளையாடும் சாய் சுதர்சன் 5 அரைச்சதங்களை அடித்ததன் மூலம் ஒரேஞ் தொப்பியை தனதாக்கினார்.

கொல்கத்தா - குஜராத் அணிகள் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் மோதின. இதில், தமிழ் வீரரான சாய் சுதர்சன் குஜராத் அணிக்காக விளையாடி வருகிறார்.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அவர் அரைச்சதம் அடித்திருந்தார். இதன் மூலம் 8 போட்டிகளில் விளையாடி 417 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

முன்னதாக, லக்னோ அணி வீரர் நிக்கோலஸ் பூரான் 368 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், சாய் சுதர்சனிடம் கடந்த போட்டியில் ஒரேஞ் தொப்பியை வாங்கி இருந்தார். தற்போது அவரிடமிருந்து சாய் சுதர்சன் ஒரேஞ் தொப்பியை தன்வசமாக்கியுள்ளார். தற்போது இருவருக்கும் இடையே 49 ஓட்டங்கள் வித்தியாசம் உளளன. (ஐ)

# நாங்கள் மீண்டும் எழுந்து வருவோம்!

## டோனி தெரிவிப்பு

சென்னை, ஏப். 23

“பிளே ஒவ் சுற்றுக்கு தகுதி பெறுவதற்கு முயற்சி செய்வோம். ஆனால் அது நிகழவில்லை என்றால் அடுத்த ஆண்டுக்கான 11 வீரர்களை கண்டறிந்து வலுவாக மீண்டு வருவோம்”, என்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார்.

மேலும், “2020ஆம் ஆண்டும் எங்களுக்கு சிறப்பானதாக அமையவில்லை. கிரிக்கெட்டின் சரியான வடிவத்தை விளையாடுகிறோமா என்பதை பார்க்க வேண்டும். மேலும் துடுப்பாட்ட வீரர்கள் தங்களை பயன்படுத்திக் கொள்கிறார்களா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இவை கேள்விக்குறியாக உள்ளன. இதைத் தவிர அணியில் உள்ள ஓட்டைகளை அடைக்க முயற்சிக்கிறோம்.

பிளே ஒவ் சுற்றுக்கு முன்னேற வேண்டுமானால் எங்கள் முன்னால் இருக்கக்கூடிய அனைத்து போட்டிகளையும் வெல்ல வேண்டும். எனினும், ஒரு நேரத்தில் ஒரு போட்டியில் மட்டுமே கவனம் செலுத்துவோம். சில போட்டிகளில் நாங்கள் தோல்வி அடைந்தால், அடுத்த ஆண்டில் சரியான அணிச்சேர்க்கையை பெறுவதில் கவனம் செலுத்துவோம்.

அதிக அளவிலான மாற்றங்களை மேற்கொள்ள நாங்கள் விரும்புவது இல்லை. பிளே ஒவ் சுற்றுக்கு தகுதி பெறுவதற்கு முயற்சி செய்வோம். ஆனால் அது நிகழவில்லை என்றால் அடுத்த ஆண்டுக்கான 11 வீரர்களை கண்டறிந்து வலுவாக மீண்டு வருவோம் - என்றார். (ஐ)



# கோலி, ரோஹித்துக்கு ரூ. 24.5 கோடி ஊதியம்!

மும்பை, ஏப். 23

ரோஹித், கோலி ஆகியோரை 24.5 கோடி ரூபாய் ஊதியம் வழங்கும் பிரிவில் சேர்த்துள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை.

2024-25 பருவ காலத்துக்கான இந்திய கிரிக்கெட் வீரர்களின் சம்பள ஒப்பந்த பட்டியலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் 34 பேர் இடம்பெற்றுள்ளனர். இதில், 4 வீரர்கள் ஏ பிளஸ் பிரிவிலும் 6 வீரர்கள் ஏ பிரிவிலும் 5 வீரர்கள் பி பிரிவிலும் மீதமுள்ள 19 வீரர்கள் சி பிரிவிலும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பட்டியலில் ஸ்ரேயாஸ் ஐயர் பி பிரிவிலும் இஷான் கிஷன் சி பிரிவிலும் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் உள்நாட்டு போட்டிகளில் விளையாட மறுத்ததால் சம்பள ஒப்பந்த பட்டியலிலிருந்து கடந்த பருவகாலத்தில் நீக்கப்பட்டிருந்தனர்.

ஓய்வு பெற்ற அஸ்வினின் இடம் ரிஷப் பந்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் ஏ பிரிவுக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

ஏ பிளஸ் பிரிவினருக்கு சம்பளமாக 7 கோடி இந்திய ரூபாய் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 24.5 கோடி ரூபாய்) வழங்கப்படும். இதேபோன்று, ஏ பிரிவினருக்கு 5 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் 17.5 கோடி ரூபாயும் பி பிரிவினருக்கு 3 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் 10.5 கோடி ரூபாயும் சி பிரிவினருக்கு ஒரு கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் 3.5 கோடி ரூபாயும் ஊதியமாக வழங்கப்படும்.

பட்டியல் விவரம்:

ஏ பிளஸ் - ரோஹித் சர்மா, விராட் கோலி, ஜஸ்பிரீத் பும்ரா, ரவீந்திர ஜடேஜா

ஏ பிரிவு - முகமது சிராஜ், கே. எல். ராகுல், ஷுப்மன் கில், ஹர்திக் பாண்ட்யா, முகமது ஷமி, ரிஷப் பந்த்.

பி பிரிவு - சூர்யகுமார் யாதவ், குல்தீப் யாதவ், அக்சர் பட்டேல், யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஸ்ரேயாஸ் ஐயர்.

சி பிரிவு - ரிங்கு சிங், திலக் வர்மா, ருதுராஜ் கெய்க்வாட், ஷிவம் துபே, ரவி பிஷ்னோய், வாஷிங்டன் சுந்தர், முகேஷ் குமார், சஞ்சு சாம்சன், அர்ஷ்தீப் சிங், பிரசித் கிருஷ்ணா, ரஜத் படிதார், துருவ் ஜுரெல், சர்பராஸ் கான், நிதிஷ் குமார் ரெட்டி, இஷான் கிஷன், அபிஷேக் சர்மா, ஆகாஷ் தீப், வருண் சக்ரவர்த்தி, ஹர்ஷித் ராணா. (ஐ)




# பாகிஸ்தான் சுப்பர் லீக் வோர்ணர் அரைச்சதம்!



கராச்சி, ஏப். 24

பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் அவுஸ்திரேலிய வீரர் முதன்முதலாக பங்கேற்ற டேவிட் வோர்ணர் அரைச்சதம் அடித்துள்ளார்.

கராச்சி கிங்ஸ் அணிக்காக விளையாடி வரும் அவர், முதன்முறையாக இந்த லீக்கில் அரைச்சதத்தை பதிவு செய்துள்ளார்.

38 வயதான அவர், உலகளவில் நடைபெறும் ரி-20 லீக் தொடர்களில் விளையாடி வருகிறார். 2009 முதல் 2024ஆம் ஆண்டு வரையில் ஐ. பி. எல்லில் விளையாடினார். இந்த ஆண்டுக்கான ஏலத்தில் அவரை எந்த ஐ. பி. எல். அணியும் எடுக்கவில்லை.

இந்த நிலையில், அவர் பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் தற்போது அவர் விளையாடி வருகிறார். கடந்த 4 போட்டிகளில் 12, 0, 31, 3 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் பெஷாவர் அணிக்கு எதிரான போட்டியில் 47 பந்துகளில் 60 ஓட்டங்கள் சேர்த்தார். இது பிஎஸ்எல் கிரிக்கெட்டில் அவர் பதிவு செய்யும் முதல் அரைச்சதம். 148 ரன்கள் இலக்கை கராச்சி அணி 19.3 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு எடுத்து வெற்றி பெற்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர்...

நோக்கில் அச்சுறுத்தலை விடுத்து வருகிறது. மறுபுறம் வேட்பாளர்களை அச்சுறுத்தும் விடயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தம்முடைய கட்சிக்கு வாக்களிக்கவில்லையாயின், குறித்த பிரதேச சபைக்கு நிதியை அனுப்ப முடியாது என்ற விடயத்தைக் கூறி ஜனாதிபதி அச்சுறுத்தல் விடுக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கம் ஒருபுறம் போலி வழக்குகளை தொடுக்கிறது. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலாத தன்மையை மூடிமறைக்கும் நோக்கி லேயே அரசாங்கம் இந்த விடயத்தை மேற்கொண்டு வருகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய விடயத்தையும்கூட அரசியலாக்கும் விடயமே நடக்கிறது. சூத்திரதாரியை வெளிப்படுத்தும் விடயத்திலும்கூட அரசாங்கத்தால் வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை. அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளை மூடி மறைத்து, தம்முடைய அரசாங்கத்தில் உள்ளவர்களை பாதுகாக்க முயல்கிறது. மக்கள் அரசாங்கத்தின்மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ளனர். ஆகவே, அரசாங்கம் உண்மையை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ஒருநாள்...

நேற்றுமுன்தினம் குழந்தை காய்ச்சலால் பாதிக்கப்பட்டது. இதையடுத்து, பெற்றோர் தனியார் மருத்துவ நிலையம் ஒன்றில் குழந்தையை காட்டி சிகிச்சை பெற்றனர். காய்ச்சல் குணமாகாத நிலையில் நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டது. எனினும், சிகிச்சை பலனின்றி குழந்தை நேற்று மாலை உயிரிழந்தது.

குழந்தையின் மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-05)

## பல குற்ற...

செய்யும்போது பல தகவல்கள் வெளியாகியுள்ளன. அவ்வாறான சம்பவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவை. ஒருசில குற்றச்சாட்டுகள் மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புடையவை. அவ்வாறான அனைத்து விடயங்கள் தொடர்பிலும் விசார ணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆதலால் துணைவேந்தரின் கடத்தலுடன் மாத்திரம் பிள்ளையான் தொடர்பு பட்டுள்ளார் என்று தீர்மானித்து விடக்கூடாது - என்றார்.

அத்துடன், "ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து பிள்ளையானிடம் விசார ணைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா", என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

"பிள்ளையானை சந்தித்து வந்ததன் பின்னர் ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து அவர் எதுவும் கூறவில்லை என உதய கம்மன்பில கூறியிருந்தார். எவ்வாறாயினும் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் மேலும் பலர் கைது செய்யப்படும் போது இந்த வலையமைப்பு மற்றும் அதன் விசாலம் குறித்து அறிந்து கொள்ளமுடியும்.

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு அப்பாலான திகதிகளில் இடம்பெற்ற பல கொலைகள் மற்றும் கப்பம் கோரல்கள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிறையிலிருந்த பிள்ளையான் இதில் தொடர்புபடவில்லை என மறுக்க முடியாது. கடந்த காலங்களில் பலர் சிறையிலிருந்து குற்றங்களை வழிநடத்திய வரலாறுகள் உள்ளன. எனவே, பிள்ளையான் இதன் பின்ன ணியில் உள்ளாரா? என்பது குறித்து விசாரணைகளில் தெரிய வரும் - என்றார். (ஐ)

## பாப்பரசர்...

தொடர்ந்து, சனிக்கிழமை பாப்பரசர் பிரான்சிஸின் உடல் புனித பீற்றர்ஸ் பேராலயத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக புனித மேரி மேஜர் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இறுதி ஊர்வலம் சாண்டா மார்த்தா சதுக்கம், ரோமானிய தியாகிகளின் சதுக்கம் வழியாக செல்லும். பின்னர் ஊர்வலம் மணி வளைவு வழியாக புனித பீற்றர்ஸ் சதுக்கத்துக்குள் சென்று வத்திக்கான் பேராலயத்தின் மைய வாசல் வழியாக நுழையும்.

வாக்குமூல பலிபீடத்தில், கர்தினால் கமர்லெங்கோ இறுதிச் சடங்கு வழிபாட்டுக்கு தலைமை தாங்குவார். அதன் முடிவில் ரோமானிய பாப்பரசரின் உடலுக்கு இறுதிச் சடங்குகள் நடைபெறும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்ஜ் பெர்கோகிலோ என்ற இயற்பெயர் கொண்ட போப் பிரான்சிஸ், இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த முதல் போப் என்ற பெருமையை பெற்றவர். 2013 மார்ச் 13ஆம் திகதி 266ஆவது போப்பாக தெரிவான அவர், கத்தோலிக்க மத நடைமுறைகளில் அதிக சீர்திருத்தங்களை மேற்கொண்டவராக அறியப்படுகிறார். (ஐ)

## தமிழர்கள்...

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் மன்னார் மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் நேற்று உரையாற்றியபோதே அவர். இவ்வாறு கூறினார்.

மன்னார் நகர சபை மண்டத்தில் நடந்த இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மன்னாரின் உள்ளூராட்சி சபைகளை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியே கைப்பற்றும். ஜே.வி.பி. அரசாங்கம் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

கடந்த வாரம் மன்னாருக்கு வந்த ஜனாதிபதி, உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தமது கட்சியாக மாத்திரம் இருந்தால் எவ்வித பாரபட்சமுமின்றி நிதி ஒதுக்குவதாக தெரிவித்தார். மற்றவர்களுக்கு வாய்ப்பு வழங்கக்கூடாது என்பதே அவரின் செய்தி. அவரின் கருத்தை பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எதிர்த்தார்கள். இலஞ்சம் கொடுத்து ஜனாதிபதி மக்களை ஏமாற்றுகிறார். எனவே, இந்த ஜனாதிபதியால் எவ்வாறு இந்த நாட்டில் ஊழலை ஒழிக்க முடியும்.

ஜனாதிபதிக்கு ஆதரவாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஒருபடி குரலை உயர்த்தி ஜனாதிபதியின் கூற்றுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு தமிழ்த் தலைவர்கள் அருகதையற்றவர்கள் என்று கூறுகிறார். கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது ஜனாதிபதியின் கட்சிக்கு அதிகளவான ஆசனங்களை வடக்கு மக்கள் வழங்கியுள்ளனர். அதை வைத்துக் கொண்டு தமிழ்த் தலைமைகள் பேசுவதற்கு வல்லமை அற்றவர்கள் என்று சொல்வதற்கு பிமல் ரத்நாயக்கவுக்கு என்ன யோக்கியதை உள்ளது?

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து 6 மாதங்களாகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்களில் கவனம் செலுத்தினீர்களா? தமிழ் மக்கள்மீது அக்கறை கொண்டவர்கள் என்று சொல்பவர்கள் நீங்கள் அதை கவனத்தில் எடுத்தீர்களா? ஐ. நா. சபை தீர்மானத்தை அமுல்படுத்த முடியாது என்று கூறினீர்கள். இது தமிழர்கள்மீது நீங்கள் காட்டுகின்ற அக்கறையா? பாராளுமன்றத்திலும் வெளியிலும் அரசியல் கைதிகள் சிறைகளில் இல்லை என்று கூறினார்கள். இதுதான் நீங்கள் தமிழர்கள்மீது காட்டுகின்ற அக்கறையா? - என்றும் கேட்டார். (ஐ)

## ஜே.வி.பி....

கருத்துகள் பரிமாறப்பட்டன. அத்துடன், இரு நாடுகளுக்கும் நன்மைபயக்கும் கூட்டாண்மைக்காக இலங்கையும் இந்தியாவும் இணைந்து பணியாற்றுவதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் நேற்று மாலை அவரின் இல்லத்துக்கு சென்று இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜா சந்தித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வரி குறித்து...

கலந்துரையாடலுக்காக குழு ஒன்று அமெரிக்கா சென்றுள்ளது. இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் நேற்று கம்பஹாவில் நடந்த மக்கள் சந்திப்பு ஒன்றில் கருத்துரைத்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க,

அமெரிக்கா வரியை அதிகரித்த பின்னர் அதன் பொருளாதாரம் உயரும் என ஆனந்தமடைந்திருந்தது. எனினும், சிலர் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் எனவும் இதனால் அரசாங்கம் வீழும் என்றும் மகிழ்ச்சியடைந்தனர்.

எவ்வாறாயினும், பிரச்னையை சுமுகமாக தீர்ப்பதற்காக குழு ஒன்று அமெரிக்காவுக்கு சென்றுள்ளது. அந்தக் குழு தற்போது பேச்சுகளை ஆரம்பித்துள்ளது - என்றார். (ஐ)

## எரிவாயு...

பரமேஸ்வரி (வயது 59) என்பவரே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த பெண், கடந்த ஞாயிற்றுக்கிழமை சமையல் செய்து கொண்டிருந்தார். அப்போது சிலிண்டர் கசிந்து அதிலிருந்த எரிவாயு வெளியேறியுள்ளது. இதனால் பரவிய தீ அவரின் ஆடையில் பற்றியது. இதில் அவர் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நாமல்...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஏப்ரல் 21ஆம் திகதி வெளியிடப்படும் என்று கூறப்படும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்களின் பெயர்கள் ஏன் இன்னும் வெளியிடப்படவில்லை", என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜயதிஸ்ஸ,

"அதைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை. ரணில் விக்கிரமசிங்க, உதய கம்மன்பில, நாமல் ராஜபக்ஷ போன்ற முன்னாள் அமைச்சர்கள்கூட ஒருவர் பின் ஒருவராகக் கவலைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அவர்கள் ஏன் கவலைப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

கடந்த ஐந்தரை ஆண்டுகளாக விசாரணைகளை நசுக்க முயற்சிப்பதை குறிக்கும் ஆதாரங்களை நாங்கள் கண்டு பிடித்துள்ளோம். எங்களுக்கு அந்த அவகாசம் வழங்கப்பட்டிருந்தால், சூத்திரதாரிகளையும் சம்பந்தப்பட்டவர்களையும் ஏற்கனவே, அம்பலப்படுத்தியிருக்க முடியும். இது தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். விளக்கங்கள் விரைவில் வெளியிடப்படும். குற்றப் புலனாய்வு திணைக்களம் தற்போது முறையான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது" - என்றார். (ஐ)

## ஜனநாயகத்தை...



நேற்றைய தினம் கொக்குவிலிலுள்ள தனது பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி மான் சின்னத்தில் போட்டியிடுகிறது. இதில், யாழ்ப்பாணம் மாநகர சபை உட்பட 4 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. பெண் வேட்பாளர் ஒருவரின் சத்தியபிரமாணத்தில் சத்திய பிரமாண ஆணையாளரின் ஒப்பம் இல்லை, இளம் வேட்பாளர்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பிறப்பு அத்தாட்சி பத்திரங்களில் ஒப்பம் இல்லை உள்ளிட்ட காரணங்களுக்காகவே எமது வேட்புமனுக்கள் நிராகரிக் கப்பட்டன.

எமது வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தோம். எமது வழக்கு உயர்நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. இதேவேளை, எமக்கு கூறப்பட்ட காரணங்களை போன்று வேறு கட்சிகள், சுயேச்சை குழுக்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு சென்றிருந்தனர். அவர்களின் வேட்பு மனுக்களை ஏற்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

எமக்கு கூறப்பட்ட காரணங்களால் நிராகரிக்கப்பட்ட மனுக்களை ஏற்றுக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தவர் களுக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ள மையால், அந்த கட்டளையை மேற் கோள்காட்டி எமது மனுக்களையும் ஏற்றுக்கொள்ளுமாறு தேர்தல் ஆணைக் குழுவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தோம்.

நீதிமன்ற கட்டளை உள்ள வேட்பு மனுக்களையே ஏற்றுக்கொள் வோம். நீங்கள் 20ஆம் திகதிக்கு முன்னர் வழக்கு தொடருங்கள் என்று அறிவுறுத்தினார்கள். அதன் பிரகாரம் நாம் கடந்த 15ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தோம்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது காலதாமதம் என்று காரணம் கூறி தேர்தல்கள் ஆணைக்குழு எமது மனுக்களை விசாரணைக்கு எடுக்க ஆட்சேபனை தெரிவித்தது. இதனால், எமது மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

ஒரு காரணத்துக்காக நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளை வழங்கினால், அதேகாரணத்துக்காக நிராகரிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டியது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கடப்பாடு. நீதிமன்ற கட்டளைகள் இருந்தால் மாத்திரமே ஏற்றுக்கொள் வோம் எனக்கூறி , எம்மை வழக்கு தொடருமாறு அறிவுறுத்திய பின்னர் நாம் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்த நிலையில் காலதாமதம் என கூறியுள் ளார்கள்.

இதனூடாக ஜனநாயகத்தை கேவலப்படுத்தி - அதனை குழி தோண்டி புதைத்துவிட்டு தேர்தல்கள் ஆணைக் குழு தேர்தலை நடாத்தவுள்ளது. இங்கே தேர்தல்கள் ஆணைக்குழு, நீதியாக - நேர்மையாக - ஜனநாயக ரீதியாக - சுயா தீனமாக செயல்படுகின்றதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இது ஜே.பி.வியின் காட்டாச்சியை எடுத்துக் காட்டுகிறது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே நாம் மக்களை எச்சரித்தோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி!

கொழும்பு, ஏப். 23

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று மேலும் குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விவரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதி நேற்று முறையே 295.10 ரூபாவாகவும், 303.79 ரூபாவாகவும் பதியாகியது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதி முறையே 294.67 ரூபாவாகவும், 303.32 ரூபாவாகவும் காணப் பட்டது.வளைகுடா நாணயங்கள் உட்பட ஏனைய பிரதான வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதிக்கு நிகராகவும் இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று குறைந்துள்ளது.

# ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் உரிய முறையில் விசாரணைகள்!

### அரசாங்கம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஏப். 23

**உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உரிய முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோது அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ஐந்தரை வருடங்களுக்குப் பிறகு உரிய முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. விசேட நிபுணத்துவமும் அனுபவமும் வாய்ந்த அதிகாரிகளால் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.



இதனை ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்தி சிலர் குழப்ப முயற்சிக்கின்றனர். அத னையிட்டு நாம் கவலையடைய மாட்டோம்.

நாம் உறுதியளித்தபடி சூத்திரதாரிகளை வெளிப்படுத்துவோம். அரசாங்கம் என்ற வகையில் விசாரணைகளுக்கு உதவி செய்கிறோமே தவிர நாம் அதில் தலையிடுவதில்லை. சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

மேலும், தாக்குதலுக்கு முன்பு இடம்பெற்ற தனிமனிதப் படுகொலைகள், கடத்தல்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடைபெறுகின்றன - என்றார். (அ)

## புத்தாண்டு குறுஞ்செய்தி அனுப்பாது அரசு ரூ. 98 மில்லியன் சேமித்துள்ளது

### நிலந்தி கொட்டஹச்சி கூறுகிறார்

கொழும்பு, ஏப். 23

தமிழ - சிங்கள புத்தாண்டு குறுஞ்செய்தியை மக்களின் தொலைபேசிகளுக்கு அனுப்பாததன் மூலம் அரசாங்கம் 98 மில்லியன் ரூபாய் சேமித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி தெரிவித்துள்ளார்.

அரசியல் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

மேலும், முந்தைய ஆட்சிகளில் புத்தாண்டுக்கு குறுஞ்செய்தி அனுப்பும் நடைமுறை இருந்தபோதிலும் இந்த வருடம் ஜனாதிபதி புத்தாண்டு குறுஞ்செய்தியை அனுப்பவில்லை.

இதனால் நாடோ அல்லது கட்சி உறுப்பினர்களோ எந்த பிரச்னைகளையும் எதிர்கொள்ளவில்லை. இந்த நடவடிக்கையால் அரசாங்கம் நிதியை சேமித்துள்ளது.

கடந்த வருடம் மாத்திரம் புத்தாண்டு குறுஞ்செய்தி செய்திக்கு 98 மில்லியன் ரூபா செலவிடப்படடது - என்றார். (அ)

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள புதிய ஆணையாளராக கமல் அமரசிங்க

கொழும்பு, ஏப். 23

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக கமல் அமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக பணியாற்றிய நிஷாந்த அனுருத்த வீரசிங்க அந்தப் பதவியிலிருந்து விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிர்வாக சேவையில் விசேட தர நிலை அதிகாரியான கமல் அமரசிங்க, இறுதியாக வடமேல் மாகாண சபையின் வீதி மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளராக பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எனது சட்டத்தரணி வந்த பின் வருவேன்!

### ரணில் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு பதில்

கொழும்பு, ஏப். 23

வெளிநாடு சென்றுள்ள தமது சட்டத்தரணி நாடு திரும்பிய பின்னர் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாவதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவின் கைது தொடர்பாக வெளியிட்ட கருத்து ஒன்றுக்காக வாக்குமூலம் பெறும் நோக்கில் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த 17ஆம் திகதி ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அழைத்திருந்தது.

எனினும் புத்தாண்டு காலப் பகுதியில் தமக்கு சமூகமளிக்க முடியாது என்றும் பிறிதொரு தினத்தை வழங்குமாறும் ரணில் கோரியிருந்தார்.

அதன்படி அவரை எதிர்வரும் 25ஆம் திகதி முன்னிலையாகுமாறு ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

சாமர சம்பத் தசநாயக்க ஊவா மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில், அரச வங்கியொன்றில் பேணப்பட்ட மாகாணசபையின் நிலையான வைப்புகள் முதிர்ச்சியடைவதற்கு முன்னதாகவே மீளப்பெறப்பட்டதன் ஊடாக நட்டம் ஏற்படுத்தப்பட்டதாக தெரிவித்து, அவர் கைதுசெய்யப்பட்டார்.

எனினும் தாம் பிரதமராக இருந்த காலப்பகுதியில், திறைசேரியின் செயலாளர் விடுத்த சுற்றறிக்கைக்கு அமைவாகவே சாமர சம்பத் இவ்வாறு செய்தார் என்று ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாகவே ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ரணில் விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலம் பதிவு செய்யவுள்ளது. (அ)

## 291 பேர் கைது!

கொழும்பு, ஏப். 23

நாடு முழுவதும் போதைப் பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 291 பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவினால் நேற்று வெளியிடபட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நாடு முழுவதும் 292 சுற்றிவளைப்புகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 104 பேரும் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 106 பேரும் கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 73 பேரும் கைதுசெய்யப்பட்டள்ளனர்.

மேலும், கஞ்சா செடி வைத்திருந்த இருவரும் போதை மாத்திரைகளை வைத்திருந்த அறுவரும் கைதுசெய்யபப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 144 கிராம் 866 மில்லிகிராம் ஹெரோயினும் 117 கிராம் 281 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் 252 கிராம் 683 மில்லிகிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளன.

பதில் பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரைக்கு அமைய கடந்த 13 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

## இலங்கை பொலிஸ் சேவையில் 5ஆயிரம் அதிகாரிகள் இணைவர்



கொழும்பு, ஏப். 23

இந்த வருடம் இலங்கை பொலிஸ் சேவையில் 5,000 அதிகாரிகளை பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பொலிஸ் நிலையப் பொறுப்ப திகாரி உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளிடையே இடம்பெற்ற இணை யவழி கலந்துரையாடலின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2,000 அதிகாரிகளை விரைவில் பணியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள 3,000 பேர் டிசெம்பர் மாதத்தில் பணியமர்த்தப்படுவார்கள்.

இதற்கு மேலதிகமாக, திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ஒழுங்கமைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பொலிஸ் அதிகாரிகளின் சேவையை திறமையாகவும், திறம்படவும் பெற்றுக் கொள்ள எதிர்ப்பார்க்கிறோம்.இலங்கை பொலிஸ் சேவைக்கு தனி சம்பள அமைப்பை தயாரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது-என்றார். (அ)

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் அறிக்கையை ஆய்வு செய்வதற்கு விசேட பொலிஸ் குழு!

கொழும்பு, ஏப். 23

2019 ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்து விசாரணை செய்ய நான்கு பேர் கொண்ட பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தலைமை தாங்குகிறார்.

மீதமுள்ள உறுப்பினர்களில் குற்றப் புலனாய்வுத் துறை பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் மற்றும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோர் அடங்குவர்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதான குழுவின் கீழ் மேலும் பல துணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ள தாகவும், அவை ஏற்கனவே அறிக்கையை ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளதாகவும் கூறினார்.

66,000 பக்கங்களுக்கும் அதிகமான அறிக்கையை தொடர்ந்து ஆய்வு செய்யும்போது கண்டறியப்பட்ட புதிய தகவல்களின் அடிப்படையில் புதிய விசாரணைகள் தொடங்கப்படும் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை, மேலதிக விசாரணைக்காக ஏப்ரல் 20 ஆம் திகதி அதிகாரபூர்வமாக குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உத்தர வின் பேரில், ஜனாதிபதியின் செயலாளரால் இந்த அறிக்கை ஒப்படைக்கப்பட்டதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org